செய்தி வெளியீடு எண்: 39 நாள்: 27.02.2018

**தேனி மாவட்டம்,**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் பல்வேறு இடங்களில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்:-**

மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தேனி-அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட அரசு மேல்நிலைப்பள்ளி, சத்துணவு கூடம், அங்கன்வாடி மையம் மற்றும் சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் வாய்க்கால்களை இன்று (27.02.2018) திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின்போது, தேனி-அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட அரசு மேல்நிலைப்பள்ளியில் ஒவ்வொரு வகுப்பிற்கும் சென்று மாணவ, மாணவியர்களின் வருகை, வாசிப்புத்திறன், எழுத்துத்திறன், நினைவாற்றல் ஆகியவை குறித்து மாணக்கர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் நேரடியாக கலந்துரையாடினார்கள். தலைமையாசிரியர் அறைக்கு சென்று ஆசிரியர்களின் வருகை பதிவேட்டினை பார்வையிட்டு, வருகை தந்துள்ள ஆசிரியர்கள், விடுப்பில் உள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை குறித்து தலைமையாசிரியரிடம் கேட்டறிந்தார். அதனைத்தொடர்ந்து, பள்ளி வளாகத்தில் செயல்பட்டு வருகின்ற சத்துணவு கூடத்தினையும், மாணக்கர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள கழிப்பறையினை பார்வையிட்டு, அடிப்படை வசதிகள் குறித்தும், நூலகம், குடிநீர் வசதி, வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூய்மை பணிகள் குறித்தும் தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்களிடம் கேட்டறிந்தார். மேலும், அங்கன்வாடி மையத்திற்கு சென்று வருகை தந்துள்ள குழந்தைகளின் எண்ணிக்கை, குழந்தைகளுக்கு வழங்கப்படவுள்ள ஊட்டச்சத்து மாவு, பயர் வகைகள், விளையாட்டு பொருட்கள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தேனி-அல்லிநகரம் கொண்டுராஜா பள்ளி அருகில் உள்ள கழிவு நீர் கால்வாயில் நீரோட்டத்தினை தடை செய்யும் அடைப்புகளை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்விற்குப்பின் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், மாணவ, மாணவியர்களின் வாசிப்புத்திறன், எழுத்துத்திறன், நினைவாற்றலை பெருக்குவதற்கு ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணாக்கர்களின் மீது தனிக்கவனம் செலுத்திட வேண்டும். ஆசிரியர்கள் அனைவரும் மாணாக்கர்களின் நலனை கருத்தில் கொண்டு அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றிட வேண்டும். பள்ளி வளாகத்தில் உள்ள கழிப்பறைகள், குடிநீர் தொட்டி மற்றும் வளாகத்தை தூய்மையாக பராமரித்திட வேண்டும். பள்ளி நூலகத்தில் உள்ள அனைத்து நூல்களும் மாணவ, மாணவியர்களுக்கு தெரிகின்ற வகையில் வரிசைப்படுத்தி, மாணாக்கர்கள் அனைவருக்கும் புத்தகம் வாசிக்கும் பழக்கத்ததை ஏற்படுத்துவதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

ஆய்வின்போது, தேனி-அல்லிநகரம் நகராட்சி அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் திரு.ராஜா அவர்கள், ஆசிரியர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**